Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 08 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | கார்த்திகை 16 | (01-12-1992) | செவ்வாய்க்கிழமை | ஓசை 287

## மருத்துவ வசதிகளை சீராக்க முயற்சிகள் எடுக்கப்படுமாம்

யாழ். மாவட்டத்தில் சுயதொழிற்றுறை மற்றும் சுகாதார, மருத்துவ வசதிகளை சீராக்குவதற்கு யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் முயற்சி எடுக்க இருக்கிறது. பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைத்து இயங்கிவரும் இந்த இணையம் தனது இரண்டாம் ஆண்டு நிறைவு வைபவத்தை நேற்று நடத்தியது. இதன் போது இம்மாவட்டத்தில் நிலவும் மருத்துவ, சுகாதார சீர்கேடுகள் குறித்தும் சுயதொழில் முயற்சிகளை ஏற்படுத்துவது குறித்தும் இவற்றின் அவசியம் குறித்தும் ஆராயப்பட்டது. அடுத்த ஆண்டு மேற்படி துறைசார்ந்த செயற்பாடுகளை துரிதப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## (புலிகளின் வெற்றிகர தாக்குதல்களின் எதிரொலி)

# போர்முறைத் திட்டங்களை மாற்றியமைக்க
# ராணுவ தலைமைப்பீடத்திற்கு நிர்ப்பந்தம்

### ...ட்டில் தங்கியிருப்போர் பற்றி
## ...திவு செய்யதவறுவோர்மீது வழக்கு தாக்கலாகும்

(கொழும்பு)

...ட்டின் குடியிருப்பாளர் ...ந்த ஏனைய எவரையும் ...லிசாரின் அனுமதியின்றி ...வைத்திருந்தால் அவர் ...மீது வழக்குத் தாக்கல் ...ப்படும் என்று கொழும் ...பொலிசார் கூறியுள்ளனர்.

அச் செய்தியில் மேலும் குடும்பத்தவர் தவிர்ந்த மற்றக் குடியிருப்பாளர்கள் பற்றி அந்தப் பகுதி பொலிஸ் நிலையங்களில் எழுத்து மூலமாகப் பதிவு செய்ய வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

## ...காழும்பு பொலிஸ் நிலைய ...பாதுகாப்பு அதிகரிப்பு

...ாழும்பு நகரிலும் சுற்றுப் ...களிலும் இருக்கும் ...லிஸ் நிலையங்களில் ...ாப்பு நேற்று முன்தினம் ...ல் மேலும் பலப்படுத்தப் ...டுள்ளது.

கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டோ மீதான குண்டுத் தாக்குதலின் பின் கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை தெரிந்ததே.

## ...டற்படை தளபதி கொலை; ...படம் பிடித்தோர் கைது

...கடற்படைத் தளபதி வைஸ், ...ட்மிரல் கிளான்சி பெர்னா...டோ குண்டுத் தாக்குதலில் ...கொல்லப்பட்ட சம்பவ...

இந்த ஐந்து இளைஞர்களும் வெளிநாடு செல்வதற்காக வெள்ளவத்தை லொட்ச்களிலும், ஏனைய இடங்களிலும்

## வீரச்சாவு

### வீரவேங்கை உதயபாரதி (கோணேஸ்)

29-11-1992 அன்றுமட்டக்களப்பில் உள்ள வைலவெட்டுவான் என்ற பகுதிக்கு சென்று கொண்டிருந்த சமயம் அப்பகுதியில் உள்ள ஆற்றில் மூழ்கி போராளிஒருவர் மரணமடைந்துள்ளார் வீரவேங்கை உதயபாரதி (கோணேஸ்) சிதம்பரப்பிள்ளை கோகுலராஜ், பாண்டிருப்பு -1, கல்முனை) என்ற போராளியே இவ்வாறு மரணமடைந்திருக்கிறார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## பாரிய கப்பல் ரோந்து

[வடமராட்சி]

சிறிலங்கா கடற்படையினருக்குச் சொந்தமான பாரிய கடற்படைக் கப்பல் ஒன்று நேற்று பிற்பகல் 4.00 மணியளவில் காங்கேசன்துறையை நோக்கி ரோந்து சென்றது அவதானிக்கப்பட்டது

இக்கப்பல் கரையில் இருந்து மிக அண்மித்த தூரத்திலேயே

## விஸ்தரிப்பு தந்திரோபாயம் தோல்வியாம்

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் வெற்றிகரமான தொடர் தாக்குதலினால் இராணுவத் தலைமைப்பீடம் தற்பொழுதுள்ள போர்முறைத் திட்டங்களை மாற்றி அமைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றி கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இராணுவ போர்யுக்தி கைவிடப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

இவ் வருட ஆரம்பத்திலிருந்து விடுதலைப்புலிகள் சிறிலங்கா இராணுவத்தினரின் தொடர் காவலரண்கள் மீதும் இராணுவ ரோந்து அணிகள் மீதும் வெற்றிகரமான தொடர் தாக்குதலை நடத்தி இராணுவத்தினருக்கு பெரும் ஆட்சேதத்தையும் ஏற்படுத்தி வந்தனர் இதன் காரணமாக இராணுவத்தினரின் போர் முறைத் திட்டங்கள் குறித்து பெரும் கேள்விகள் எழும்பியிருந்தன.

இந்நிலையில்பலாலியின்கிழக்கெல்லையில் கடந்த 23ஆம் திகதிநள்ளிரவுபுலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சிறிலங்கா படையினரின் யுத்த தந்திரோபாயத்தில் மீள் பரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியிருப்பதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

கட்டைக்காட்டில் புலிகள் தாக்குதல் நடாத்தி பெருமளவு ஆயுதங்களை எடுத்துச் சென்ற தாக்குதலையடுத்து மீண்டும் பலாலி முன்னணிக் காவலரண்கள் தாக்கப்பட்டுள்ளன.

இத் தாக்குதல்கள் சிறிலங்கா படையினரின் யுத்த தந்திரோபாயத்தை கேள்விக்குரியதொன்றாக ஆக்கியுள்ளன.

முன்னணி காவலரண்களை விரிவாக்கம் செய்வதிலுள்ள ஆபத்தை தாக்குதல்கள் எடுத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளுடன் மோதுவதை தவிர்க்க தாக்குதலை இடைநிறுத்திய தளபதி

### ராணுவ நீதிமன்றத்தில் விசாரணை

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப்

மீது வழக்குத் தாக்கல் ப்படும் என்று கொழும் பொலிசார் கூறியுள்ள யங்களில் எழுத்து மூலமாகப் பதிவு செய்ய வேண்டும் என் றும் கோரப்பட்டுள்ளது.

## காழும்பு பொலிஸ் நிலைய பாதுகாப்பு அதிகரிப்பு

ாழும்பு நகரிலும் சுற்றுப் களிலும் இருக்கும் லிஸ் நிலையங்களில் காப்பு நேற்று முன்தினம் ல் மேலும் பலப்படுத்தப் டுள்ளது.

கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டோ மீதான குண்டுத் தாக்குதலின் பின் கொழும்பில் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டிருந்தமை தெரிந்ததே.

## டற்படை தளபதி கொலை; படம் பிடித்தோர் கைது

கடற்படைத் தளபதிவைஸ், அட்மிரல் கிளான்சி பெர்னா ன்டோ குண்டுத் தாக்குதலில் கொலைப்பட்ட சம்பவங் களை கமராமூலம் படம் எடு த ஐந்து யாழ். வாசிகளை பொலிசார் கைது செய்துள்ள ாக அங்கிருந்து வரும் செய் கள் தெரிவிக்கின்றன.

கடற்படைத் தளபதி கொல் ப்பட்ட மறுநாள் காலை இவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த ஐந்து இளைஞர்களும் வெளிநாடு செல்வதற்காக வெள்ளவத்தை லொட்ச்களி லும். ஏனைய இடங்களிலும் தங்கியிருந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இளைஞர்கள் தொட ர்பாக பொலிசார் தீவிர கவ னம் செலுத்தி வருவதாகவும் இவர்களது பெற்றோர் இன மும் அவர்களைத்தேடி அலை ந்து திரிவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (05)

## இந்தியதூதுவராலயத்திற்கு புலிகள் அச்சுறுத்தலாம்

கொழும்பிலிருக்கும் இந்தி ந் தூதுவராலயத்தைச் சேர் வர்களுக்கு விடுதலைப் லிகளிடமிருந்து அச்சுறுத்தல் ம் ஏற்கூடும் என்று பாலிஸ் வட்டாரங்கள் கூறி யுள்ளன.

தேசிய புலனாய்வு பணிய கத்தினர் இதுபற்றி இந்திய தூதுவராலயத்தினருக்கு கூறி யிருப்பதாகவும் மேலும் தெரிய வருகிறது.

## மனிதாபிமான உதவிகள் தொடர வேண்டும்

### சர்வ செஞ்சிலுவை கோரிக்கை

சர்வதேச ரீதியான மனிதா மான உதவிகள் சிறிலங்கா ற்கு தொடர வேண்டும் என்று சர்வதேச செஞ்சி லுவை சங்கம் கோரியுள்ளது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

முழுநேர போராளிஒருவர் மரண மடைந்துள்ளார் வீரவேங்கை உதயபாரதி (கோணேஸ்), சிதம்பரப்பிள்ளை கோகுல ராஜ், பாண்டிருப்பு -1, கல் முனை) என்ற போராளியே இவ்வாறு மரணமடைந்திருக் கிறார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத் தைத் தெரிவித்துள்ளனர்.

## பாரிய கப்பல் ரோந்து

[வடமராட்சி]

சிறிலங்கா கடற்படையின ருக்குச் சொந்தமான பாரிய கடற்படைக் கப்பல் ஒன்று நேற்று பிற்பகல் 4.00 மணி யளவில் காங்கேசன்துறையை நோக்கி ரோந்து சென்றது அவதானிக்கப்பட்டது

இக்கப்பல் கரையில் இருந்து மிக அண்மித்த தூரத்திலேயே கரைப்பகுதியை நோக்கி சுட் டவாறு சென்றது.

இப்பாரிய கப்பல் இராணு வத்தினரையும், ஆயுதங்களை யும் ஏற்றி இறக்கக் கூடியதும் கரைப்பகுதிக்கு வரக் கூடியது மான தென தெரியவருகிது.

[யோ]

# புலிகளுடன் மோதுவதை தவிர்க்க தாக்குதலை இடைநிறுத்திய தளபதி

## ராணுவ நீதிமன்றத்தில் விசாரணை

இவ் வருட ஆரம்பத்திலிரு ந்து விடுதலைப்புலிகள் சிறில ங்கா இராணுவத்தினரின் தொடர் காவலரண்கள் மீதும் இராணுவ ரோந்து அணிகள் மீதும் வெற்றிகரமான தொடர் தாக்குதலை நடத்தி இராணுவத்தினருக்கு பெரும் ஆட்சேதத்தையும் ஏற்படுத்தி வந்தனர் இதன் காரணமாக இராணுவத்தினரின் போர் முறைத் திட்டங்கள் குறித்து பெரும் கேள்விகள் எழும்பியி ருந்தன.

இந்நிலையில்பலாலியின்கிழக் கெல்லையில் கடந்த 23ஆம் திகதிநள்ளிரவுபுலிகளால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதல் சிறிலங்கா படையினரின் யுத்த தந்திரோபாயத்தில் மீள பரி சீலனை செய்ய வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியு றுத்தியிருப்பதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித் துள்ளது.

கட்டைக்காட்டில் புலிகள் தாக்குதல் நடாத்தி பெரும ளவு ஆயுதங்களை எடுத்துச் சென்ற தாக்குதலையடுத்து மீண்டும் பலாலி முன்னணிக் காவலரண்கள் தாக்கப்பட்டுள் ளன.

இத் தாக்குதல்கள் சிறில ங்கா படையினரின் யுத்த தந் திரோபாயத்தை கேள்விக்கு ரிய தொன்றாக ஆக்கியுள்ளன.

முன்னணி காவலரண்களை விரிவாக்கம் செய்வதிலுள்ள ஆபத்தை தாக்குதல்கள் எடுத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப் பட்ட இராணுவ நடவடிக் கையில் தலைமைப் பீடத்தின் கட்டளைக்கு பணிய மறுத்த இராணுவ அதிகாரிமீது இரா ணுவ நீதிமன்றத்தில் வழக்கு தொடர உள்ளதாக சிறில ங்கா பாதுகாப்பு வட்டாரங் களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்தியொன்று தெரிவிக்கிறது.

அண்மையில் மன்னார் மாவ ட்டத்தில் பாரிய இராணுவ நடவடிக்கையொன்று மேற் கொள்ளப்பட்டதாக சிறி லங்கா இராணுவ தலைமைப் பீடம் அறிவித்திருந்தது. இந் நடவடிக்கை மூலம் கைப்பற் றப்படும் பிரதேசங்களில் நிலை கொள்ளுமாறு பொறுப்பான அதிகாரிக்கு தலைமைப்பீடம் அறிவுறுத்தியிருந்தது.

ஆனால் புலிகளுடன் மோத விரும்பாத பொறுப்பதிகாரி படையினரை பின்வாங்கி செல்லுமாறு கட்டளையிட்ட தாக இராணுவ தலைமைப் பீடம் அந்த அதிகாரி மீது குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பான விசார ணையை மேற்கொள்வதற் காக பொறுப்பதிகாரி கொழும் பிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

தலைமை பீடத்தின் கட்ட ளைக்கு இணங்கி அவ்விடத் தில் நிலைகொள்வதாயின் விமானப் படையின் பலமான உதவியும் 1100 படையினரும் தமக்கு தேவையாக இருந்த தாக நடவடிக்கைக்கு பொறுப் பான அதிகாரி தெரிவித்துள் ளார்.

ஆனால் தம்மிடம் 800 படையினர் மட்டுமே இருந்த தாகவும் இதனால் நடவடிக் கையை தொடராது திரும்ப வேண்டியிருந்ததாகவும் பொறு ப்பதிகாரி தெரிவித்துள்ளார். அத்துடன் போதிய தளபாட ங்கள் தம்மிடம் இருக்கவில்லை எனவும் இந்நிலையில் புலிக ளுடன் மோத தாம் விரும்ப வில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நடவடிக்கை க்கு பொறுப்பாயிருந்த இரா

[4 ஆம் பக்கம் பார்க்க]

இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கு


## கூடுதலான சுயாட்சியே இந்தியாவின் கொள்கையாம்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை யில் முடியுமானவரையில் கூடு தலான சுயாட்சியை வலியு றுத்துவதே இந்தியாவின் கொள்கையாகும் என்று அண் மையில் கொழும்பில் இநதியா வின் வெளியுறவுக் கொள்கை என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய முன்னாள் வெளியுறச் செயலாளர் மல்கேந்திரா தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் இனப்பிரச்சினைக்கு பிரிவினை மூலம் தீர்வைக் கண்டுவிட முடியாது என்றும் இனப்பிரச் சினை இருக்கும் நாடொன் றில் கூடுதல் சுயாட்சி ஏற் படுத்தவே இந்தியா பாடுபடும் என்றும் குறிப்பிட்டார்.

## வீரச்சாவு



வீரவேங்கை அருமைநாயகி

23-11-92 அன்று பலாலி கிழக்கில் சிறிலங்கா இராணு வத்துடன் இடம்பெற்ற பாரிய மோதலில் வீரவேங்கை அருமைநாயகி [ஜேசுதாசன் ஜெபா அஞ்சலீன், பீசறோட்,

[4 ஆம் பக்கம் பார்க்க]

# கடல் வழியாக தரையிறங்கிய புலிகள் காவலரணின் பின்புறமாகத் தாக்கினர்

## பலாலி தாக்குதல்குறித்து ராணுவம் அதிர்ச்சி

பலாலியின் கிழக்கு எல்லை யில் கடந்த 23 ஆம் திகதி நள் ளிரவு நடந்த தாக்குதலின் போதுசுமார் எண்பது புலிகள் படகுகள் மூலம் தொண்டமா னாறு கரையில் தரையிறங்கி யுள்ளனர் பின்னர் அங்கிருந்து இடைக்காடு நோக்கி முன் னேறி படையினரின் முன்னணி காவலரண்களின் பின்புறத்தை அடைந்துள்ளனர் என இரா ணுவ வட்டாரங்களை மேற் கோள்காட்டி ''சண்டே ரைம்ஸ்'' தெரிவித்துள்ளது.

புலிகள் அங்கிருந்து துப்பாக் கிகளால் குண்டுமாரி பொழி ந்த போது அங்கிருந்த இரா ணுவ பொறியியலாளர் படைப்பிரிவிற்கு சிந்திக்கச்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கட்டுவன் இராணுவம் சூடு

### நித்திரையில் இருந்தவர் காயம்

கட்டுவன் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இரா ணுவத்தினர் நேற்று அதி காலை முதல் மக்கள் குடியிரு ப்புகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இரா ணுவத்தினரின் மேற்படி தாக் குதலினால் ஏழாலைப் பகுதி யில் தனது வீட்டில் நித்திரை யிலிருந்த ஜெகதாதேவி (வயது 22) என்பவர் காய மடைந்தார்.

கையில் காயமடைந்த இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

## குடியிருப்புகள் மீது இராணுவம் தாக்குதல்

யாழ். குடாநாட்டில் நேற்று முன்தினம் இரவும் நேற்று அதி காலையும் சிறிலங்கா படை யினர் பரவலான எறிகணைத் தாக்குதலையும் துப்பாக்கி பிரயோகத்தையும் மேற் கொடுள்ளனர்.

பலாலி, மாதகல், மண்டை தீவு, காரைநகர் பகுதி ளிலி

[4 ஆம் பக்கம்] பார்க்க]

# கடற்படையினர் வேட்டுக்கு மீனவர் பலி; படகுகள் சேதம்

பருத்தித்துறை கடற்பகுதி ல் சிறிலங்கா கடற்படை னர் சுட்டதில் தொழிலில் பட்டிருந்த மீனவர் ஒருவர் லத்தில் துடிதுடித்து மரண ணார். இவருடன் சென்ற ருவர் தெய்வாதீனமாக பிர் பிழைத்துள்ளனர்.

நேற்றுபகல் 12.30 மணியள ல் இச் சம்பவம் நிகழ்ந்தது. ச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருகையில்; பலாலியி ருந்து இடம் பெயர்ந்து ருத்தித்துறை கொட்டடியில் ங்கிவந்த மொறீஸ்- அன்ரன் அருள்நேசராசா (வயது28) மொறீஸ்- இயூசியாஸ் (வயது 30) ஆ. விமலராசா (வயது28) ஆகிய மூன்று மீனவர்களும் கடலில் தொழிலில் ஈடுபட் டிருந்த இவ் வேளையில் திடீ ரென வந்த கடற்படையினர் சரமாரியாக இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதில் இருவர் கடலில் குதித்தனர். படகில் இருந்த மொறீஸ்- அன்ரன் அருள்நேசராசா நான்கு சூட் டுக்களுக்கு இலக்காகி படகி லேயே மரணமானார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை யாவார்.

இவருடன்சென்ற மற்றைய மீனவர்கள் இவரையும் பட கையும் கரைக்கு எடுத்து வந் தனர். இவர்களது படகும் சூட்டுக்கு இலக்காகி சேத மடைந்தது. வலையும் கடலில் வீசப்பட்டது.

கடலில் மற்றைய பகுதியில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கியும் கடற்படையினர் சுட்ட போதி லும் சேதம் எதுவும் ஏற்பட வில்லை. [யோ]

வனங்கள் வாழும் நாட்டிலே
குளிர்மை என்றும் வாழ்ந்திடுமே

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அழகிய படத்துடனான கலண்டர்கள் விற்பனையாகின்றன பல வர்ணக் கலர்களில் விலாசம் பதிப்பித்தும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகள் தங்களின் தேவைக்கேற்றபடி கொள்வனவு செய்து ஏமாற்றத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள். ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை 330. காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (3640)

### சங்கீதம் வினா-விடை

சங்கீதம் வினாவிடை (ஆண்டு 10,11) விற்பனையாகிறது. (O/L) பரீட்சையில் உச்சப் புள்ளி பெற உதவும் வழிகாட்டி, முந்நூற்றுக்கு மேற்பட்ட வினாக்களுக்கு விரிவான விடைகள் இராகலட்சணங்கள், இசைக் குறிப்புகள், இசைமேதைகளின் வரலாறுகள் கொண்டது. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம் (3727)

### புதிய வகுப்புகள் கல்வியாண்டு 1993

1993 கல்வியாண்டிற்கான புதிய வகுப்புகள் ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை 01-12-92 செவ்வாய் பிற்பகல் 3-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. யாழ் முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை. பயிற்சிப் பரீட்சைகள், புலமைப் பரிசில் பரீட்சைக்கு சிறந்த நிறுவனம், புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3732)

### மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம், றோ. க./கிறீஸ்தவம்), வர்த்தகம், விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582 Stanley Road, Jaffna. (சி-5450)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள



## திறப்பு விழா

### மருந்துச் சமுத்திரம்

MEDI OCEAN

உரும்பராய்

நிகழும் ஆங்கீரச வருஷம் கார்த்திகை 16-ம் நாள் (01-12-1992) செவ்வாய்க்கிழமை (இன்று) பகல் 10.45 தொடக்கம் 12 15 வரையுள்ள சுப முகூர்த்தத்தில்

### மருந்துச் சமுத்திரம்

சிவஞானம் ஸ்ரீகணேஷன்

(உரிமையாளர் பரணி மருந்துச்சாலை)

அவர்களால் திறந்து வைக்கப்படும்.

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

(3734) நிர்வாகம்



## கலை வர்த்தகக் கல்லூரி

### C. C. A

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்

ஆண்டு: 9, 10, 11

மாலை நேர வகுப்புக்கள்

**ஆரம்பம்; 5.12.92**

| | |
|---|---|
| விஞ்ஞானம் | திரு- இரா.செல்வவடிவேல் |
| கணிதம் | திரு. மகேந்திரன் |
| | திரு. நிமலநாதன் |
| தமிழ் | திரு. ஞானதிருக்கேசன் |
| ஆங்கிலம் | திரு. T. சௌந்தர பாண்டியன் |
| சமூகக் கல்வி | திரு. வேலா |

★ சனி, ஞாயிறு, செவ்வாய், வியாழன் நான்கு நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.

★ ஏனைய பாடங்களும் நடைபெறும்.

(சி-5494) -நிர்வாகி



## BECON (பாரதிதாசன் கல்வி நிலையம்)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

### கல்வியாண்டு - 1993

**O/L** ஆண்டுகள் 9-10

❋ யாழ்மாவட்டத்தின் அதிசிறந்த ஆசிரியர் குழுவின் ஒருங்கிணைந்த சேவை

T.S.S. மோகன் - விஞ்ஞானம்


## உள்ளூராட்சி தேர்தலில் ஒருவருக்குமூன்றுவாக்குகள்

(கொழும்பு)

அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெற இருக்கும் உள்ளூராட்சி தேர்தல்களில் ஒருவர் மூன்று வாக்குகளை அளிக்க கூடிய வகையில் வாக்களிக்கும் முறையில் மாற்றங்களை கொண்டுவர போவதாக தேர்தல் ஆணையாளர் ஆர். கே. சந்தானந்த த. சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தேர்தலுக்கான ஆரம்பகட்ட வேலைகளை தற்போது தேர்தல் திணைக்களம் மேற்கொண்டு வருவதாகவும் 1989 ஆண்டு பாராளுமன்ற தேர் தேர்தல் 1988 ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தல் என்பவற்றில் வாக்காளருக்கு ஒரு வாக்கு மட்டுமே வழங்கப்பட்டதாக தெரிவித்தார்.

1993 ஆம் ஆண்டு நடைபெற உள்ள தேர்தல் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் புதிதாக வாக்களிக்க இருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்தார்.

## 8 ஆம் திகதி 'குமாரி' வரும்

(யாழ்ப்பாணம்

அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு ''குமாரி'' கப்பல் கொழும்பில் இருந்து புறப்பட்டு எதிர்வரும் 8 ஆம் திகதி பருத்தித்துறையை வந்தடையும் என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## அறிவித்தல்

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் யாழ்ப்பாணம்.

### பங்குப்பணம் ரூபா 100/-

06-03-1992-ல் திருத்தி அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தின் படி உபவிதி 18 (1) அமைவாக ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100/- ஆகும். எனவே சகல அங்கத்தவர்களும் தமது பங்கினை ரூபா 100/- வைத்திருக்கத் தவறும் பட்சத்தில் கிளைக் குழுத் தேர்தலிலோ, பொதுச் சபையிலோ, நெறியாளர் குழுவிலோ, பிரதிநிதித்துவம் வகிக்க முடியாது எனவே 31-12-1992க்கு முன்னர் தங்கள் பங்குத் தொகையை 100/- ரூபாவாக உயர்த்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(சி-5511) செயலாளர்.

SLOW & STEADY WINS THE RACE

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடாத்தும் கழக நிதிக்கான

## அதிர்ஷ்ட இலாபச்சீட்டு

1 ம் பரிசு பெண்கள் துவிச்சக்கரவண்டி

2-ம் பரிசு ஆண்கள் துவிச்சக்கரவண்டி

3 ம் பரிசு பெற்றோல்மாக்ஸ், குக்கர்

4-ம் பரிசு சேலை

5-ம் பரிசு உதைபந்தாட்டபந்து

5 ஆறுதல் பரிசுகள்

பருத்தித்துறை இக்கமுனை மைதானத்தில்

## 2-ம் ஆண்டு நினைவு



| மலர்வு | மறைவு |
|---|---|
| 04 — 08 — 1958 | 24 — 11 — 1990 |

### சங்கரப்பிள்ளை செல்வரத்தினம்

(சிங்கம் இன்டஸ்றீஸ் பங்காளர்)

திதி: 01. 12. 1992

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காயும், சமூகசோதியாயும், சுற்றத்துக்குக் கொழு கொம்பாயும் நீங்கள் வாழ்ந்து பணி செய்த பசுமை நினைவு எம்மனத்தை விட்டு அகலாது உங்களை வணங்குகின்றோம்

சிங்கம் இன்டஸ்றீஸ்
1029/3.கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், தாய், சகோதரர், சகோதரிகள், உற்றார், உறவினர்.

(சி-5503

## நினைவு கூருகின்றோம் ...
## 1992-12-01

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் வவுனியா - ஓமந்தை பேருந்து நிலையத்தில் வைத்து சிறிலங்காப் படையினரால் கைது செய்ய பட்டு பின்னர் காணாமற்போன 3 - தமிழர்கள்.

உமையாள்புரம் பகுதியில். சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சைவாலயப் பிரதமகுருவான தமிழர்.

1985 ஆம் ஆண்டு மட்டு-அரசடிச் சந்திப் பகுதியில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

விஜயன் (கணபதிப்பிள்ளை சற்குணானந்தம் - கருவேப்பங்கேணி, மாமாங்கம், மட்டக்களப்பு.)

1986 ஆம் ஆண்டு மட்டு - ஆரையம்பதி பகுதியில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

ஜெயம் | சதீஸ் (செல்லத்தம்பி மோகனச்சந்திரன் - ஆரையம்பதி மட்டக்களப்பு.)

1987 ஆம் ஆண்டு மட்டு-தியாவெட்டுவான் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். ராஜ் (பரமக்குட்டி அருளம்பலம் - வந்தாறுமூலை, மட்டு)

கோப்பாய்ப் பகுதியில், இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

ஜெய்சங்கர் | ஜெய்சா (தம்பு ஜெயக்குமார் -கோப்பாய் வடக்கு - யாழ் )

ஜோண்சன்

## வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம், றோ. க./கிறிஸ்தவம்), வர்த்தகம், விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582 Stanley Road, Jaffna. (சி-5450)

## கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி (சி-5510)

## காசோலை கண்டெடுப்பு

ரூபா ஐயாயிரத்திற்கான இலங்கை வங்கியின் காசோலை ஒன்று வீதியில் கிடக்கக் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

**கண்டெடுக்கப்பட்டுள்ளது**

முக்கிய ஆவணங்கள் சில உள்ளிட்ட பொலித்தீன் பையொன்று கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## நூல் வெளியீட்டை ஊக்குவிக்க அமைப்பு

(குருநகர்)

ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளை நூல் உருவில் வெளியிடுவதற்கும், அவற்றின் விற்பனையை ஊக்குவிப்பதுக்குமான அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைப்பின் உறுப்பினர்களாக டொமினிக் ஜீவா, டானியல் அன்ரனி, கோப்பாய் சிவம் யோசெப்பாலா, டேவிட் லிகோரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (21)

---

# BECON (பாரதிதாசன் கல்வி நிலையம்)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## கல்வியாண்டு - 1993

# O/L ஆண்டுகள் 9-10

❀ யாழ்மாவட்டத்தின் அதிசிறந்த ஆசிரியர் குழுவின் ஒருங்கிணைந்த சேவை

| | |
|---|---|
| T.S.S. மோகன் | - விஞ்ஞானம் |
| MR. சதீஸ் | - கணிதம் |
| K.S. முத்துலிங்கம் | - சமூகக்கல்வி |
| MR. அமரசிங்கம் | - தமிழ் |
| S. சிவலிங்கம் | - ஆங்கிலம் |
| T. ராஜன் | - வர்த்தகம் |

**ஆரம்பம் 05-12-92. 2.00 pm**

❀ அனுமதியைமுன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்

❀ வாரத்தில் நான்கு நாள் வகுப்புகள்

(சி-5504)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம்

[O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

# O/L

EVENING CLASSES (3.00 - 6.00)

Sat. & Sun. classes (8.00 - 3.00)

## ஆண்டு 10, 9, 8, 7, 6

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| விஞ்ஞானம் | : திரு J.R. சூரி |
| கணிதம் | : திரு. ஜெகன் |
| ஆங்கிலம் | : திரு. விஸ்வநாதன் |
| சமூகக்கல்வி | : திரு. கோபி |
| தமிழ் | : திரு. சிவா |
| வர்த்தகம் | : திரு கருணாகரன் |
| சமயம் | : திரு கெங்கா |

(சி/ 5506)

**ஆரம்பம்**

**05.12.92(சனி) மாலை 3 மணி**

---

WINS THE RACE

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடாத்தும் கழக நிதிக்கான

## அதிர்ஷ்ட இலாபச்சீட்டு

1 ம் பரிசு பெண்கள் துவிச்சக்கரவண்டி
2-ம் பரிசு ஆண்கள் துவிச்சக்கரவண்டி
3 ம் பரிசு பெற்றோல்மாக்ஸ், குக்கர்
4-ம் பரிசு சேலை
5-ம் பரிசு உதைபந்தாட்டபந்து

**5 ஆறுதல் பரிசுகள்**

பருத்தித்துறை இக்கமுனை மைதானத்தில் (25-12-1992) நத்தார் தினத்தன்று பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடாத்தும் 1992-ம் ஆண்டிற்கான உதைபந்தாட்ட இறுதிச்சுற்றுப்போட்டியின் போது அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

அ.இ சீட்டு அன்பளிப்பு 10 ரூபா

செயலாளர்
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

பருத்தித்துறை
30-11-1992

(சி/3729)

---

## நினைவஞ்சலி



**மேஜர் தமிழரசன்** (டொச்சன்)

23 - 11 - 1992 பலாலி இராணுவத்துடன் நேரடி மோதலில் வீரச்சாவடைந்த (மேஜர் டொச்சா) உன் திடீர் பிரிவு எங்கள் நெஞ்சில் இரத்தமாய்க் கசிகிறது. எனது இனிய நண்பா நீ எப்போதும் எங்களைச் சுற்றி நிற்பாய், இனி எப்போது உன் திருமுகத்தை பார்க்கப்போகின்றோம், ஆனாலும் உன் திரு முகம் ஒவ்வொருவினாடியும் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும், நண்பனுக்கும் இனியவனாய் போராட்டத்திற்கு விசுவாசியாய்த் திகழ்ந்தாய். மண்ணின் மீட்பிற்காய் இறுதிவரை போராடி போர்க்களத்தில் உயிர் நீத்த உனது இலட்சியம் நிறைவேற வேண்டி எமது கண்ணீர் அஞ்சலியை பாதகாணிக்கையாக உனது பாதத்தில் சமர்ப்பிக்கின்றோம்.

உன்பிரிவால் கதறும்,
திரு. இம்மானுவேல் கமில்டன்
குடும்பத்தினர்.

தென்மூலை,
அச்சுவேலி.

(3731)

---

விஜயன் (கணபதிப்பிள்ளை சற்குணானந்தம் - கருவேப்பங்கேணி, மாமாங்கம், மட்டக்களப்பு.)

1986 ஆம் ஆண்டு மட்டு - ஆரையம்பதி பகுதியில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

ஜெயம் / சதீஸ் (செல்லத்தம்பி மோகனச்சந்திரன் - ஆரையம்பதி மட்டக்களப்பு.)

1987 ஆம் ஆண்டு மட்டு-தியாவெட்டுவான் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். ராஜ் (பரமக்குட்டி அருளம்பலம் - வந்தாறுமூலை, மட்டு)

கோப்பாய்ப் பகுதியில், இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

ஜெய்சங்கர் / ஜெய்சா (தம்பு ஜெயக்குமார் -கோப்பாய் வடக்கு - யாழ்)

ஜோண்சன்

யாழ்-சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அகதி முகாம் மீது இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 5 - தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு கரவெட்டிப் பகுதியில், இந்தியப் படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய -

தீசன் / ஜெகதீசன் (மரியாம்பிள்ளை அன்ரனி நிக்சன் - வதிரி, நெல்லியடி - யாழ்.)

சுந்தர் (சின்னத்தம்பி சுந்தரராஜன் - தபாற்கந்தோர் வீதி, மத்தொனி, கரவெட்டி - யாழ்.)

காரைநகரில், இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட வலந்தலையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1989-ம் ஆண்டு, திருக்கோணமலை - தம்பலகமம், சூரங்கல்பகுதியில், இந்தியப் படையினருடனான நேரடிச்சமரின்போது வீரச்சாவெய்திய-

லெப். திவாகர் (சுப்பையா ஜீவராசா - நொச்சிக்குளம் - திருக்கோணமலை)

குணம் (ரவிச்சந்திரராஜ் - மன்னார்)

மங்களதாஸ் - முல்லைத்தீவு

புத்தூரில், தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட-

நாட்டுப்பற்றாளரான -
'புத்தெழில்' இலக்கிய சஞ்சிகை ஆசிரியர் -

திருஞானம் (புத்தூர்)

1990-ம் ஆண்டு, மாங்குளம் முகாம் தகர்ப்பின் போது, தப்பியோடிய சிறிலங்காச் சிப்பாயுடன் நிராயுதபாணியாக மோதியபோது, அச்சிப்பாய் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலின்போது, விழுப்புண் அடைந்திருந்து யாழ். வைத்தியசாலையில் வீரச்சாவெய்திய -

நாட்டுப்பற்றாளரான -

"மாமனிதர்" - வன்னிக்கிழவர் -

பொ. அருணாசலம் (பாலமோட்டை - வவுனியா)

அளவெட்டி - சிராவத்தை வைரவர்கோவிலடியில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட வயோதிபப் பெண்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/5507)

### சிந்தனைக்கு

முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காகுமோ?

— தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 01- 12 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## தீக்குளித்தாலும் பிரயோசனமில்லை

தென்னிலங்கை நகரங்களில் பல நூற்றுக் கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் வயது வேறுபாடோ, ஆண் - பெண் வேறுபாடோ காட்டப்படவில்லை. இளைஞர்கள், இளம் பெண்கள் உட்பட வயோதிபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். பம்பலப்பிட்டியில் 60 வயது வயோதிப மாது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர்களில் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், ஏனைய அரச உத்தியோகத்தர்கள், வெளிநாடு செல்ல கொழும்பில் தங்கியிருந்தோர் உட்பட வடக்கு கிழக்கில் இருந்து கொழும்பு சென்று வாழ்க்கை நடத்துவோரும் அடங்குவர் இதேவேளை, தமிழ் வர்த்தகர்கள் மீது சிறிலங்கா இரகசியப் பொலிஸாரின் கவனம் தீவிரமாகவுள்ளது. இவர்களில் பலர் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறாகக் கொழும்பில் உள்ள தமிழர்கள் கைதாவதென்பது அவர்கள் யாவரும் விடுதலைப் புலிகள் என்பதால் அல்ல. அவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பதினாலேயே ஆகும். அதாவது, தமிழர்கள் என்றால் புலிகள் என்பது அரசின் நிலைப்பாடாக மாறியுள்ளதே இதற்குக் காரணமாகும்.

ஆனால் வடக்கு - கிழக்கில் இருந்து கடந்த சில வருடங்களில் ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பத்தினர் தென்னிலங்கைக்குச் சென்று குடியேறியுள்ளனர். வடக்கு - கிழக்கில் 'பாதுகாப்பு' இல்லை. வடக்கு - கிழக்கில் நடைபெறும் தமிழர் தேசிய இனப்போராட்டத்திற்கும், எமக்கும் எதுவித தொடர்பும் இல்லை. நாம் எப்பொழுதும் சிங்கள ஆட்சிக்கு 'நட்பாக', அடிமையாக இருக்கவே விரும்புகிறோம் என்பதே அவர்களின் நிலைப்பாடாகும். இதனை நிரூபிப்பதற்கு அவர்கள் தீக்குளிக்கவும் தயாராகவுள்ளனர்.

இதேபோன்று ஒரு தொகுதி வர்த்தகர்களும் கொழும்பில் சென்று குடியேறி தமது வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரித்தனர். 1983 இலும், அதற்கு முன்னரும் தென்னிலங்கையில் தமிழரின் முதலீட்டிற்கு நடந்தவற்றை மறந்ததாக இருந்தது அவர்களின் இந்நடவடிக்கை. அத்தோடு, பெரும் முதலாளிகள் பலர் சிங்கள அரசாங்கத்தின் இரா

# பெரும் பலத்துடன் பாரிய தாக்குதல்

# அழிவை ஏற்படுத்திய பின் முகாம் திரும்புதல்

## -இராணுவத்தின் புதிய தந்திரோபாயமாம்

இந்த ஆண்டு முடிவடைவதற்கு முன்பாக ஈழப்போரில் உயிரிழக்கும் இராணுவத்தினரின் எண்ணிக்கை ஐந்து இலக்கங்களைக்கொண்டதாக உயர்ந்துவிடும்.

இராணுவ விமர்சகர்களின் கருத்துப்படி இராணுவ நடவடிக்கைகளின் தன்மையில் முட்டுக்கட்டை தோன்றியிருப்பதாகவும், திடீரென பின்புறத்திலிருந்து தாக்குதல் தோன்றியிருப்பதாகவும் தெரியவருகிறது.

சில பகுதிகளைப் பிடிப்பதும், அவற்றைப் பலப்படுத்துவதும் என்று வகுக்கப்பட்ட தந்திரோபாயம் விடுதலைப் புலிகளுக்கு பலத்த நெருக்கடிகளை கொடுத்துள்ளது என்பது நிரூபிக்கப்பட்டாலும் இந்த வருட ஆரம்பம் முதல் படையினர் தரப்பில் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டு வருவது குறிப்பிடக் கூடியதே

மார்ச் மாதத்தில் ஒப்பரேஷன் ஹயபார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது புலிகள் மரபு ரீதியான போர் முறையில் பலத்த இழப்புக்களைச் சந்தித்திருந்தனர். அதன் பின்னர் துருப்புக்கள் பல பகுதிகளைக் கைப்பற்றி தம்மைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர். இந்த ஒவ்வொரு நடவடிக்கையின் பின்னரும் பெருமளவிலான துருப்புக்கள் மீளப்பெறப்பட்டு சிறிய அளவு துருப்பினர் மட்டுமே அங்கு தங்கவைக்கப்பட்டனர்.

இதில் தனித்து விடப்படக்கூடிய இடங்களில் இராணுவ அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன. கேந்திர முக்கியமான ஆனையிறவு, பொலநறுவை, மட்டக்களப்பு, வெலி ஓயா, முல்லைத்தீவு, திருக்கோணமலை போன்ற இடங்களில் இத்தகைய இராணுவ அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன.

பதுங்கு குழிகளையும், காப்பரண்களையும் அமைப்பதில் படையினர் ஈடுபடுத்தப்பட்ட அதேவேளை விடுதலைப்புலிகளின் மைய நரம்புகளைத் தாக்குவதற்கான திட்டமும் வகுக்கப்பட்டது.

ஆனால் விடுதலைப் புலிகளால் நன்கு திட்டமிட்ட முறையில் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட தாக்குதல்களும், பாதுகாப்பு உயர் நிலையில் ஏற்படுத்திய தாக்கங்களும் இராணுவத்தின் தந்திரோபாயத்தை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. இதனால் தனித்த இடங்களில் இருக்கும் இராணுவ நிலைகள் விடுதலைப் புலிகளின் இலகுவான தாக்குதலுக்கு இலக்காகக் கூடும்.

திடுமென நிகழ்ந்த பல சம்பவங்களால் திடுக்குற்றுப் போயுள்ள பாதுகாப்பு உயர் பீடம் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தந்திரோபாயத்தில் மாற்றம் தேவை என்று வலியுறுத்தியுள்ளது. இக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள், கூட்டுப்படைத் தலைமையக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இவை ஒருபுறத்தில் நிகழ்ந்து கொண்டிருக்க மறுபுறத்தில் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்த வண்ணம் உள்ளது. பாதுகாப்பு நிலைகள் சிறிய எதிர்ப்புடன் அல்லது எதிர்ப்பு இல்லாமலேயே விடுதலைப் புலிகளால் வெற்றிகொள்ளப்பட்டு விடுகிறது.

நான்கிற்கு மேற்பட்ட தடவைகளில் வேட்டைக்கு இரை தேடிப் போனவர்களே வேட்டையாடப்பட்டு விட்டனர். தோல்வியுற்ற நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு முகாம் திரும்பும் போது இராணுவத்தினர் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர் வழமையான ரோந்துப் பணிகளில் ஈடுபடுபவர்களும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. மேலும் சிறிய சிறிய இராணுவப் பாதுகாப்பு நிலைகளை திடீரெனத் தாக்கும் புலிகள் அங்கிருக்கும் ஆயுதங்கள் மற்றும் ரவைகளை எடுத்துச் சென்று விடுகின்றனர்.

பாதுகாப்பு உயர் பீடத்தினரைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ எல்லாத் தாக்குதல்களிலும் படையினர் திருப்பித் தாக்குவதற்கு தயாராவதற்கு இடையில் அல்லது திடீர்த் தாக்குதலின் அதிர்ச்சியிலிருந்து விடுபடுவதற்கு இடையில் அவர்கள் வெற்றி கொள்ளப்பட்டுவிடுவது ஒரு மேலதிகப் பிரச்சினையை தோற்றுவித்துள்ளது

இறுதியாக நடத்தப்பட்ட புலனாய்வுகள் சில காரணங்களை வெளிப்படுத்துகின்றன

படையினர் ஏன் தமது உயிரைக் கூட பாதுகாக்க முடியாத நிலையில் உள்ளனர் என்பதுவே பெரும் கேள்வியாகும். இதற்கான விடை திகைப்பூட்டுவதாகும்.

ஆண்டுக்கணக்காக யுத்தம் நீடித்துச் செல்வதால் படையினர் மத்தியில் களைப்புதோன்றியுள்ளது. இது இதற்கு முன் எப்போதும் காணப்படாத ஒன்றாகும் ஆனால் இதற்கு முன்னர் அவர்கள் ஒரு உண்மையை ஏற்க மறுத்து வந்தனர். எனினும் டென்சில் கொப்பேகடுவ, விஜய விமலரத்தின போன்றோரின் மரணத்திற்கு பின்னர் போர்முடிவுக்கு வராது என்று தோன்றுவதாக முன்னணிக் காவலரணில் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட ஒரு படையினன் தனது உயர் அதிகாரிக்கு தெரிவித்தான். இது தான் அவ் உயர் அதிகாரியினதும் கருத்தாகும்.

இந்தச் சண்டை தொடர்வதன் மூலம் மனிதர்கள் இயந்திரமாக்கப்பட்டுள்ளனர்.

> போர்முனையிலிருந்து கிடைக்கும் அதிர்ச்சியூட்டும் தகவல்களும், விம்பங்களும் என்ற தலையங்கத்தில் சண்டேரைம்ஸ் பத்திரிகையில் டினேஷ் வட்டவன எழுதியுள்ள கட்டுரையின் மொழியாக்கம்.

நடமாடும் எலும்புக்கூடுகளாக சிலர் மாறிப்போயுள்ளனர் என்று ஒரு இராணுவ அதிகாரி கூறுகின்றார்

குடும்ப உறவினர்களைக் கூட மாதக்கணக்காகப் பிரிந்திருக்க வேண்டிய துரதிர்ஷ்ட நிலைமை அவர்களுக்கு இத்தகைய கொடூரமான சூழ்நிலைமைகளால் பாதிக்கப்படுபவர்கள் சண்டைக்கு தகுதியற்றவர்களாகின்றனர். ஆனால் இவர்களை மீளப்பெற்று அவ் இடங்களில் புதியவர்களை நிறுத்துவதற்கு ஆட்பலம் போதுமானதாக இல்லை.

அண்மையில் நிகழ்ந்த சில தாக்குதல்கள் தவிர்க்கப்பட அல்லது திருப்பித்தாக்கக் கூடியதாகவே இருந்தது என்று ஒப்புக்கொள்ளும் இராணுவ உயர் அதிகாரி படையினர் விழிப்பாக இல்லாமல் இருப்பது துரதிர்ஷ்டமானது என்றும் குறிப்பிடுகிறார். சில இளம் இராணுவ அதிகாரிகள் படையினரைக் கையாள்வதில் காட்டும் அணுகுமுறையும் கூட படையினர் மன நிலையை பாதிக்கின்றது. எனினும்யாரையும் குற்றம் சாட்ட முடியாது. ஆனால் ஏதாவது செய்யப்படவேண்டும். அதுவும் விரைவில் செய்யப்பட்டாக வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரி தெரிவித்தார்.

இளம் அதிகாரிகளுக்கு சண்டையில் ஈடுபடுவதிலும், நெருக்கடிகளைச் சமாளிப்பதிலும் நல்ல பயிற்சி அளிக்கப்பட இருக்கின்றது. என பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறுகின்றன. இதற்கான விரைவான திட்டங்கள் வகுக்கப்படுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர் இவ் விடயம் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு ஆராயப்படுவதாக கூட்டுப்படைத் தலைமையகம் கூறுகின்றது.

இரவு நேர தேடுதலுக்காகப் புறப்பட்டுச் செல்லும் படையினர் தோல்வியுடன் திரும்பிவரும் போது தாக்கப்படும் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன, இது விடுதலைப்புலிகள் எந்த நேரமும் விழிப்புடன் இருந்து படையினர் நடமாட்டத்தை அவதானிப்பதையும் படையினர் அவ்வாறு விழிப்புடன் இல்லை என்பதையும் எடுத்துக்காட்டுவதாகவே உள்ளது.

எனவே தான் இந்தச் சூழ்நிலையில் தளத்திலுள்ள இளம் அதிகாரிகளுக்கு நல்ல பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

கூட்டுப்படைத் தலைமையிடம் அதிகாரம் மீளக் கையளிக்கப்பட்டபின்னர் தந்திரோபாயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து உயர் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

சிறிய இராணுவ நடவடிக்கைகளையும், குறைந்தளவில் துருப்புக்களை ஈடுபடுத்தும் நடவடிக்கைகளையும் குறைக்க வேண்டும் என்பதுவே கூட்டுப் படைத்தலைமையின் கருத்தாக இருந்தது என்று நம்பப்படுகிறது.

இந்த புதிய திட்டத்தின்படி ஆகக்குறைந்தது ஒரு பட்டாலியன் இராணுவத்தினர் ஈடுபடக்கூடிய வகையில் அதற்கான கருவிகளும், ரவைகளும் இன்ன பிற சாதனங்களும், ஒழுங்குபடுத்தப்பட்டு பெரிய அளவிலான இராணுவ நடவடிக்கைகள் முடுக்கி விடப்படும். இதன் மூலம் படையினரின் இழப்புக்களை குறைக்கலாமென்றும், பெரிய எண்ணிக்கையில் படையினர் ஈடுபடும்போது அவர்களுக்கான ஆபத்து குறைவு என்பதை எடுத்துக் காட்டும் என்றும் கூட்டுப்படைத் தலைமை நம்புகின்றது

பெரிய நடவடிக்கைகள் புலிகள் மீது மேலும் அழுத்தத்தைக் கொடுக்கும் என்றும், வருட முற்பகுதியில் படையினர் பெற்ற நன்மைகளைத் தக்க வைத்துக் கொள்ள உதவும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது

இந்த நடவடிக்கைக்கான முடிவு பெரிய விளைவுகளைக் கொடுக்கும் என்பதால் இராணுவத்தின் இறுதி இலக்குகளை எய்துவதற்கானதாக இருக்கும் என்று அரசாங்க தரப்பில் கூறப்படலாம்.

இப்போதைய நிலைமை கைப்பற்றப்பட்டபகுதிகளைப் பாதுகாப்பது என்பது தான். இதுவும் ஆட்பலப் பற்றாக்குறையினால் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளது. மறுபக்கத்தில் சிறிய அளவிலான முகாம்கள் எதிரிகளின் இலகுவான தாக்குதல்களுக்கு உள்ளாகிவிடக் கூடும்.

ஒரு புதிய தந்திரோபாயம் வெகுவிரைவில் அமுலுக்கு வரலாம். அதன் மூலம் சிறிய அளவிலான முகாம்கள் மீளப்பெறப்பட்டு அதிலிருக்கும் படையினர் பெரிய அளவிலான தாக்குதல் ஒன்றிற்கு பயன்படுத்தப்படலாம்.

எனினும் முக்கியமான சில இடங்களில் இருக்கும் இராணுவ நிலைகள், அவ்வவ் இடங்களில் இராணுவத்தினரின் இருப்பு மேலும் அழுத்தத்தை கொடுக்கக் கூடியது என்பதால் மீளப்பெறப்படமாட்டாது என்பதே எதிர்பார்க்கப்படுகிறது.

''நாங்கள் பெரிய பலத்தோடு தாக்கி எவ்வளவு அழிவை ஏற்படுத்த முடியுமோ அதனைச் செய்து விட்டு மீண்டும் விரைவில் முகாம்களுக்கு திரும்பி விட வேண்டும்.'' இதுதான் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டது.

நிலைப்பாடாக மாறியுள்ளதே இதற்குக் காரணமாகும்.

ஆனால் வடக்கு-கிழக்கில் இருந்து கடந்த சில வருடங்களில் ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பத்தினர் தென்னிலங்கைக்குச் சென்று குடியேறியுள்ளனர். வடக்கு-கிழக்கில் 'பாதுகாப்பு' இல்லை. வடக்கு-கிழக்கில் நடைபெறும் தமிழர் தேசிய இனப்போராட்டத்திற்கும், எமக்கும் எதுவித தொடர்பும் இல்லை. நாம் எப்பொழுதும் சிங்கள ஆட்சிக்கு 'நட்பாக', அடிமையாக இருக்கவே விரும்புகிறோம் என்பதே அவர்களின் நிலைப்பாடாகும். இதனை நிரூபிப்பதற்கு அவர்கள் தீக்குளிக்கவும் தயாராகவுள்ளனர்.

இதேபோன்று ஒரு தொகுதி வர்த்தகர்களும் கொழும்பில் சென்று குடியேறி தமது வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரித்தனர். 1983 இலும், அதற்கு முன்னரும் தென்னிலங்கையில் தமிழரின் முதலீட்டிற்கு நடந்தவற்றை மறந்ததாக இருந்தது அவர்களின் இந்நடவடிக்கை. அத்தோடு, பெரும் முதலாளிகள் பலர் சிங்கள அரசாங்கத்தின் இராணுவ விரிவாக்கத்திற்கென பாதுகாப்பு நிதி என்ற போர்வையில் பல கோடி ரூபாக்களை வாரியும் வழங்கினர். இதன்மூலம் சிங்கள அரசாங்கத்திற்கு தமது 'தேசிய உணர்வையும்', விசுவாசத்தையும் வெளிக்காட்டியும் கொண்டனர்.

ஆனால், இவர்களின் இம்முயற்சிகள் எவையும் வெற்றியளிப்பதாகஇல்லை. தமிழர்கள், தாம்தமிழர்கள் இல்லை என்பதை மறந்துள்ள போதும், இவர்கள் தமிழர்கள் என்பதைச் சிங்களவர்கள் மறந்துவிடவில்லை. 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின்போது, தமிழையே மறந்து சிங்களமயமான தமிழ்ப் பரம்பரையினரைக் கூட சிங்களவர் விரட்டியடித்திருந்தனர் இதனை தமிழர் வெகு இலகுவில் மறந்தமை துர்ப்பாக்கியகரமான தொன்று.

அதாவது, தமிழர்கள் தமது பாதுகாப்பிற்கு தமது தாயக மண் ஒன்றே பொருத்தமான இடம் என்பதை மறந்ததன் விளைவே இதுவாகும். ஆனால், இதனைப் பலதடவை நாம் வற்புறுத்தியிருப்பினும், அவர்கள் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையினால், மீண்டும் ஒரு தடவை நாம் இதனைச் சுட்டிக்காட்ட வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

தமது 'ஜனநாயகம்' (நாகரிகம்) என்பன குறித்து பெருமை பேசும் மேற்குலகில் கூட இன்று சிறுபான்மை இனங்களின் பாதுகாப்புபற்றிக் கேள்வி எழும்பியுள்ளன. அங்கும் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் வன்முறையே இதற்குக் காரணமாகிறது. இதற்கு இவ்வருடம் அமெரிக்காவில் இடம்பெற்ற வெள்ளையர், கறுப்பர் இன மோதலும் ஐரோப்பாவில் இன்று நடைபெறும் தேசியஇனங்களின்போராட்டங்களும் சான்றாகும்.

அதாவது, உலகில் எப்பகுதியிலும் சிறுபான்மை இனங்கள் பெரும்பான்மை இனங்கநடன் அனுசரித்துப் போக எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் பெரும்பான்மை இனங்களினால் முறியடிக்கப்பட்டே வந்துள்ளது. இந்நிலையிலேயே சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பும், சுதந்திரமும் அவர்களின் தனித்துவமான பிரதேசங்களிலேயே உள்ளது இதனைபுரிந்துகொண்ட இனங்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கான போரை நடத்திக் கொண்டிருக்கின்றன. இதனைப் புரிந்து கொள்ளாது இன்னமும் பெரும்பான்மை இனங்களிடம் சரணடைய முற்படுபவர்கள் இவர்கள் கொடுக்கும் பரிசில்களையும் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

பட்டன. கேந்திர முக்கியமான ஆனையிறவு, பொலநறுவை, மட்டக்களப்பு, வெலி ஓயா, முல்லைத்தீவு, திருக்கோணமலை போன்ற இடங்களில் இத்தகைய இராணுவ அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன.

பதுங்கு குழிகளையும், காப்பரண்களையும் அமைப்பதில் படையினர் ஈடுபடுத்தப்பட்ட அதேவேளை விடுதலைப்புலிகளின் மைய நரம்புகளைத் தாக்குவதற்கான திட்டமும் வகுக்கப்பட்டது.

ஆனால் விடுதலைப் புலிகளால் நன்கு திட்டமிட்ட முறையில் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட தாக்குதல்களும், பாதுகாப்பு உயர் நிலையில் ஏற்படுத்திய தாக்கங்களும் இராணுவத்தின் தந்திரோபாயத்தை குழப்பத்தில்

சென்று விடுகின்றனர்.

பாதுகாப்பு உயர் பீடத்தினரைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ எல்லாத் தாக்குதல்களிலும் படையினர் திருப்பித் தாக்குவதற்கு தயாராவதற்கு இடையில் அல்லது திடீர்த் தாக்குதலின் அதிர்ச்சியிலிருந்து விடுபடுவதற்கு இடையில் அவர்கள் வெற்றி கொள்ளப்பட்டுவிடுவது ஒரு மேலதிகப் பிரச்சினையை தோற்றுவித்துள்ளது

இறுதியாக நடத்தப்பட்ட புலனாய்வுகள் சில காரணங்களை வெளிப்படுத்துகின்றன

படையினர் ஏன் தமது உயிரைக் கூட பாதுகாக்க முடியாத நிலையில் உள்ளனர் என்பதுவே பெரும் கேள்வியாகும். இதற்கான விடை திகைப்பூட்டுவதாகும்.

ஆண்டுக்கணக்காக யுத்தம்

நிலைமை அவர்களுக்கு இத்தகைய கொடூரமான சூழ்நிலைமைகளால் பாதிக்கப்படுபவர்கள் சண்டைக்கு தகுதியற்றவர்களாகின்றனர். ஆனால் இவர்களை மீளப்பெற்று அவ்விடங்களில் புதியவர்களை நிறுத்துவதற்கு ஆட்பலம் போதுமானதாக இல்லை.

அண்மையில் நிகழ்ந்த சில தாக்குதல்கள் தவிர்க்கப்பட அல்லது திருப்பித்தாக்கக் கூடியதாகவே இருந்தது என்று ஒப்புக்கொள்ளும் இராணுவ உயர் அதிகாரி படையினர் விழிப்பாக இல்லாமல் இருப்பது துரதிர்ஷ்டமானது என்றும் குறிப்பிடுகிறார். சில இளம் இராணுவ அதிகாரிகள் படையினரைக் கையாள்வதில் காட்டும் அணுகுமுறையும்கூட படையினர் மன நிலையை பாதிக்கின்றது. எனினும்யாரை

யளிக்கப்பட்டபின்னர் தந்திரோபாயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து உயர் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

சிறிய இராணுவ நடவடிக்கைகளையும், குறைந்தளவில் துருப்புக்களை ஈடுபடுத்தும் நடவடிக்கைகளையும் குறைக்க வேண்டும் என்பதுவே கூட்டுப் படைத்தலைமையின் கருத்தாக இருந்தது என்று நம்பப்படுகிறது.

இந்த புதிய திட்டத்தின்படி ஆகக்குறைந்தது ஒரு பட்டாலியன் இராணுவத்தினர் ஈடுபடக்கூடிய வகையில் அதற்கான கருவிகளும், ரவைகளும் இன்ன பிற சாதனங்களும், ஒழுங்குபடுத்தப்பட்டு பெரிய அளவிலான இராணுவ நடவடிக்கைகள் முடுக்கி விடப்

குதல் ஒன்றிற்கு பயன்படுத்தப்படலாம்.

எனினும் முக்கியமான சில இடங்களில் இருக்கும் இராணுவ நிலைகள், அவ்வவ் இடங்களில் இராணுவத்தினரின் இருப்பு மேலும் அழுத்தத்தை கொடுக்கக் கூடியது என்பதால் மீளப்பெறப்படமாட்டாது என்பதே எதிர்பார்க்கப்படுகிறது.

''நாங்கள் பெரிய பலத்தோடு தாக்கி எவ்வளவு அழிவை ஏற்படுத்த முடியுமோ அதனைச் செய்துவிட்டு மீண்டும் விரைவில் முகாம்களுக்கு திரும்பி விட வேண்டும்.'' இதுதான் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டது.

# புதிய தஞ்சக்கொள்கை ஆராய்வு மன்னிப்புச் சபை கண்டனம்

(புருசெல்ஸ்)

ஐரோப்பிய சமூக நாடுகளின் அமைச்சர்கள்மட்டத்தில் ஆராயப்பட இருக்கும் அகதிகளுக்கான தஞ்சம் அளிக்கும் கொள்கை தொடர்பான யோசனைகளை சர்வதேச மன்னிப்புச்சபை கடுமையாக கண்டனம் செய்துள்ளது.

இந்த தஞ்சக்கொள்கை ஒரு பயங்கரமான முன்னுதாரணமாக இருக்கும் என்று மன்னிப்புச்சபை தனது கண்டனத்தில் மேலும் கூறியுள்ளது.

ஆதாரமற்றவையெனக் கருதப்படும் தஞ்சக் கோரிக்கைகளை நிராகரிப்பதற்கான யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படுமேயானால் உண்மையான அகதிகளுக்கு பாரதூரமான விளைவுகள் ஏற்படும் வகையில் சர்வதேச சட்டத்தை பன்னிரண்டு ஐரோப்பிய அரசுகளும் வியாக்கியானம் செய்கின்றன என்பதே அர்த்தமாகும் என்றும் மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது

ஐரோப்பாவில் அகதிகளுக்கான பாதுகாப்பைத் தளர்த்துவதற்கு யோசிப்பது மிகவும் கவலை தரும் ஒரு விடயமாகும். ஏனென்றால் அகதிகள் அமைப்புகள் மற்றும் சுயாதீனமான நிபுணர்களின் பங்குபற்றல் எதுவுமின்றி பகிரங்க அல்லது பாராளுமன்ற விவாதம் எதுவுமின்றி மூடிய கதவுகளுக்குப் பின்னால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் மன்னிப்புச் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெனிசூலா சதிப்புரட்சி அரச படைகள் முறியடிப்பு

(காரகாஸ்)

வெனிசூலாவில் நடந்த கிளர்ச்சிப் படையினர் மேற்கொண்ட சதிப்புரட்சி முயற்சி முற்றாக முறியடிக்கப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது

தென் அமெரிக்க நாடான வெனிசூலாவில் அரசுக்கு எதிராக கடந்த வெள்ளியன்று சதிப்புரட்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. கிளர்ச்சி ஆரம்பித்து 14மணி நேரத்தில் முக்கிய விமான தளத்திலிருந்து கிளர்ச்சிப் படையினர் விரட்டியடிக்கப்பட்டதாக அரசுப் படை கூறியது.

எனினும் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருப்பதாகவும் அரசியலமைப்பு உரிமைகள் இடை நிறுத்தப்பட்டிருப்பதாகவும், பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், எதிர்ப்புக் காட்டுவதற்கான சுதந்திரம் சகலதும் மறுக்கப்பட்டிருப்பதாகவும், வீடுகளில்சோதனை நடத்தவும், எவரையும் கைது செய்யவும் பாதுகாப்பு படையினருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது

கிளர்ச்சிக்கு தலைமை தாங்கிய தலைவர்கள் கிளர்ச்சி ஆரம்பித்த ஆறு மணித்தியாலங்களில் அரசுப் படைகளிடம் சரணடைந்ததாகவும் தெரிய வருகின்றது.

## இந்தியப் பிரதமர் தமிழக விஜயம்

(சென்னை)

தமிழ் நாட்டிலும், புதுவை யூனியன் பிரதேசத்திலும் வெள்ளம் பாதித்த பகுதிகளைப் பார்வையிடுவதற்காக இந்தியப் பிரதமர் பி வி. நரசிபமராவ் தனி விமானம் மூலம் சென்னைக்கு இன்று வரவுள்ளார். நண்பகல் பன்னிரண்டு நாற்பதுக்கு மீனம்பாக்கம் விமான நிலையத்தை வந்தடையும் பிரதமர் நரசிம்மராவ் பின்னர் தமிழக முதல்வர் ஜெயலலிதா, மற்றும் புதுவை முதல்வர் வைத்திலிங்கம் ஆகியோர் சகிதம் ஹெலிகப்டர் மூலம் வெள்ளம் பாதித்த பகுதிகளை சுற்றிப் பார்வையிடுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## காஷ்மீரில் தேர்தலில்லை

(டில்லி)

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் தேர்தல் நடத்தும் சூழல் இன்னமும் ஏற்படவில்லை என்றும் விரைவில் தேர்தல் நடத்தும் சாத்தியம் எதுவும் இல்லை என்றும் மத்திய அரசு தெளிவுபடக்கூறியுள்ளது.

## மோசடி அடையாள அட்டை அனுப்பும் முயற்சி தோல்வி

(கொழும்பு)

மோசடி செய்யப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதிகளை மத்திய கிழக்கு நாடொன்றிற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்ப மேற்கொள்ளப்பட்ட முயற்சி ஒன்று வெள்ளவத்தை தபால் நிலையத்தில்வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அடையாள அட்டைகளை அனுப்ப முயற்சி செய்த நபர் பொலிசாரைக் கண்டதும் தப்பி ஓடிவிடவே தபாலகத்தில் அவரை சிபார்சு செய்த தமிழ் உத்தியோகஸ்தர் விசாரணைக்கென பொலிசாரினால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இவ்விசாரணையின் போது மேற்படி நபர் பெயர் விபரங்கள் எழுதப்பட்ட 25 அட்டைகளை கொண்டுவந்து பதிவுத்தபால்மூலம் டுபாய்க்கு அனுப்புமாறு கையளித்தார் என்றும், நீண்டவரிசையில் நிற்பதைத் தவிர்ப்பதற்காக அங்கு வேலை செய்யும் தமக்குத் தெரிந்த உத்தியோகஸ்தர் ஒருவரின் உதவியை நாடியுள்ளார். பிரஸ்தாப உத்தியோகஸ்தர் இவருக்கு முன்னுரிமை கொடுக்குமாறு சிபார்சு செய்ததையடுத்து கடிதம் பதிவு செய்வதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது எனவும் தெரியவந்தது.

## கோமாரியில் விமானத்தளம் மீண்டும் செயற்படும்

அம்பாறை மாவட்டத்திலுள்ள கோமாரியில் சிறிலங்கா விமானப்படைக்கு விமான நிலையமொன்று அமைக்கப்பட இருக்கின்றது.

இது தொடர்பாக ஆய்வுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. மேற்படி இடத்தில் இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது விமான நிலையம் ஒன்றை பத்து ஏக்கர் நிலப்பரப்பில்பிரிட்டிஷ் அமைத்திருந்தது. யுத்தம் முடிவடைந்ததும் இந்த விமானத்தளம் உபயோகிக்கப்படாது மீண்டும் காடாக மாறிவிட்டது. இப்போது கிழக்கில் இருந்து துருப்புக்களை துரிதமாக வேறு இடங்களுக்கு அனுப்புவதற்கும் உணவுப்பொருள்களை அனுப்புவதற்கும் ஏற்ற வகையில இந்தவிமானத் தளத்தை மீண்டும் உபயோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## காலி செல்லும் ரயிலில் வெடி குண்டுப் புரளி

கொழும்பு கோட்டையில் இருந்து காலிக்கு புறப்பட்ட தபால் ரயில் வண்டியில் குண்டு இருப்பதாக அச்சுறுத்தல் வெளியானதை தொடர்ந்து கல்கிசை ரயில் நிலையத்தில் சுமார் இரண்டு மணி நேரம் ரயில் நிறுத்தப்பட்டு சோதனை நடாத்தியதையடுத்து அவ்அச்சுறுத்தல் வெறும் புரளி எனத்தெரிய வந்தது.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 7. 40 மணிக்கு கல்கிசைப் புகையிரத நிலையத்தில் நடைபெற்றது. சோதனை முடிந்ததும் இர்வு 9 30 மணிக்கு காலியை நோக்கி புறப்பட்டது என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈழநாதம்

# பாரதீய ஜனதாக்கட்சி மீது விஷ்வஹிந்து பரிஷத்பாய்ச்சல்

## தம்மை ஏமாற்றுவதாக கண்டனம்

(அயோத்தி)

அயோத்தியில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை இராமர் ஆலயம் அமைக்கும் பணியை ஆரம்பிப்பதில் தாம் உறுதியாக இருப்பதாக விஷ்வ ஹிந்துப்பரிஷத் இயக்கம் மீண்டும் அறிவித்திருக்கிறது எனினும் இங்கு இராமர் ஆலயத்தை அமைப்பதற்கு இந்திய உயர் நீதிமன்றம் விதித்த தடை உத்தரவை உத்தரப்பிரதேச மாநில அரசு அமுல்படுத்தும் என்று அதன் முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்,

இதனால் விஷ்வஹிந்துப் பரிஷத்இயக்கம் பாரதீயஜனதாக்கட்சி மீது ஆத்திரமடைந்திருக்கிறது. இக் கட்சி தம்மை ஏமாற்றுவதாக விஷ்வஹிந்துப் பரிஷத் இயக்கம் கருதுகிறது.

அதேவேளை இவ் இயக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ள இருக்கும் பணிகளை கண்காணிக்கவும், இவ்விடயம் தொடர்பாக உத்தரப்பிரதேச அரசு நடந்து கொள்ளும் முறை குறித்து கண்காணிக்கவும் நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் தனது அறிக்கையை உயர் நீதிமன்றத்திடம் சமர்ப்பிப்பார் என்று கூறப்படுகிறது.

அதேவேளை நீதிமன்றத்தின் தடை உத்தரவை பாரதீய ஜனதாக்கட்சி மீறுமா அல்லது கீழ்ப்படியுமா என்ற சந்தேகமும் தோன்றியிருக்கிறது. இத் தடை உத்தரவை இக் கட்சி மீறும் நிலை ஏற்படுமா என்று எல். கே. அத்வானியிடம் கேட்ட போது இதுபற்றி உறுதியாக எதுவும் கூறமுடியாது என்று கூறிவிட்டார்.

எனினும் இதற்கு முன்னர் இதை விட முக்கியமான சட்டம் எனக்கருதிய பல சட்டங்களைத்தான் பல முறை மீறியதாகவும் இவ்வாறு சட்டங்களை மீறுவது மகாத்மாகாந்தியின் பாரம்பரியம் என்றும் அவர் கூறினார்.

### போர்

துக் காட்டுகின்றன.

இவ்வாறு காவலரண்களில் பெருமளவு படையினரை நிலைகொள்ளச் செய்வதனால் தாக்குதல் முனைகளில் தேவையான படையினரை ஈடுபடுத்த முடியாதும் போகிறது. இது குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு நிகழும் புலிகளின் அதிரடித் தாக்குதலினால் திடுக்கிட்டுப்போயுள்ள பாதுகாப்பு உயர் பீடம் பாதுகாப்புச்சபை கூட்டத்தில் தந்திரோபாயத்தில் மாற்றம் தேவை என வற்புறுத்தியதாகவும் தெரியவருகின்றது. இப் பாதுகாப்புச் சபை கூட்டத்தில் அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை புதிய போர் யுக்தி ஒன்று விரைவில் அமுலுக்கு வரலாம் எனவும் தெரியவருகின்றது. இதன் மூலம் சிறிய முகாங்கள் மூடப்பட்டு அதிலுள்ள படையினர் பெரும் தாக்குதலுக்குப் பயன் படுத்தப்படலாம். இதேவேளை தாக்குதலில் ஈடுபடும் படையினரும் தாக்குதல் முடிந்ததும் அப் பகுதியில் தரிக்காது விரைவிலேயே முகாம் திரும்புவர் எனவும் தெரியவருகிறது.

### புலிகளுடன்

ணுவ அதிகாரிமீது இராணுவ நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமானால் தாம் பதவி விலகப்போவதாக இந் நடவடிக்கையில் பொறுப்பதிகாரிக்கு உதவியாக இருந்த கனிஷ்ட இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அவ் ஏஜென்சி செய்தி மேலும்தெரிவித்தது.

### ஆதாரம் காட்டி பெறவும்

செம்மணிக்கும் நாவற்குழிக்கும் இடையில் சிறு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. இப்பணத்தை தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளமுடியும்.

### மனிதாபி

பொஸ்னியா, சோமாலியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட புதிய நெருக்கடிகள் போன்று சிறிலங்காவும் புதிய நெருக்கடிகளை எதிர் நோக்குகின்றது எனவும் இது குறித்து சர்வதேச சமூகத்திற்கு நினைவு படுத்த வேண்டியுள்ளது எனவும் கொழும்புக்கு வந்துள்ள சர்வதேச செஞ்சிலுவைசங்க செயலாளர் கூறியுள்ளார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

30.11.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்;- 6877

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;-
43-2524, 27-3946, 28-1794, 24-9825

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்:- —
26-9658, 26-0375, 40-2394, 42-6157, 24-5015, 27-9489
26-1949, 27-3803, 26-2297, 41-0689, 40-1688, 42-3329
24-9938, 42-1464

# லெப். கேணல் போய் 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

(நமது நிருபர்)

உலகிலேயே மிகச்சிறந்தது என போற்றப்படும் தலைமைத்துவத்தையும் மனோவலிமை மிக்க போராளிகளையும் கொண்டது எமது விடுதலைப் போராட்டம் அனைத்து வளங்களும் போதியளவு இருந்தும் மக்களின் முழுமையான பங்களிப்பு இன்மையால் நீண்டு செல்கிறது.

இவ்வாறு நேற்று இரவு ரீகன் நகரில் நடைபெற்ற மட்டு-அம்பாறை மாவட்ட தளபதி லெப்டினன்ட் கேணல் போயின் முதலாம் ஆண்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தமிழீழ மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் தெரிவித்தார்.

நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் நாம் பணம் கொடுத்து வாங்கிய ஆயுதங்களை விட எதிரியிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்கள் குவியலாகக் கிடக்கிறது மக்களின் பங்களிப்பால் போதிய பொருளாதாரம் எம்மிடம் உண்டு. இருந்தும் மக்களின் முழுமையான பங்களிப்பு இன்மையாலேயே இப்போராட்டம் நீண்டு கொண்டு போகிறது.

போராட்டம் நீள நீள இழப்புகள் அதிகமாகவே இருக்கும் குறுகிய காலத்தில் எமது தாயகத்தை மீட்டிட மக்கள் இன்றே இணைய வேண்டும். மக்கள் முழுநேரப் பங்காளிகளாக மாறும் பட்சத்தில் விடுதலை விரைந்து வரும் என்றார்.

தொடர்ந்து செல்வன் பிரதீபன் உரையாற்றுகையில் இந்த தேசத்தின் விடுதலைக்காக தமது உயிரைத் துச்சமென எண்ணி வித்தானவர்கள் தான் இந்த மாவீரர்கள்.

எந்த சக்தி எப்படி வந்தாலும் முடியும் என்று உறுதி கொண்டு நம்புபவனுக்கு இயலாதது ஒன்றுமே இல்லை என்ற நம்பிக்கையுடன் உறவுகளைப் பிரிந்தும், பாச உறவுகளுக்கு வரம்புகட்டியும் உண்மையான உலகம் ஒன்று உயிர்க்கட்டும் என்றோ ஒரு நாள் வெற்றிகிட்டும் என்ற எண்ணத்துடன் போராடி மடிந்தவர்கள் தான் மாவீரர்கள். இவர்கள் காலத்தால் அழியாத வீரகாவியங்கள் தேசத்தின் விடிவெள்ளிகள் என்றார்

### வீரச்சாவு

குருநகர்] என்னும் விடுதலைப் புலிகள் போராளியும் வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### மருத்துவ

படுத்துவதிலேயே இந்த இணையம் அதிக கவனம் செலுத்தும் என்று இந்த இணையத்தின் நிர்வாக அலுவலர் தெரிவித்தார்.

கடந்த இரு ஆண்டுகளாக இந்த இணையம் பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைப்பதிலும், இவற்றின் செயற் திட்டங்களை ஒழுங்குபடுத்துவதிலும் கவனம் செலுத்துவதன் மூலம் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கிடையிலான இணைப்புப் பாலமாக செய்யப்பட்டு வருகிறது. அத்துடன் 'தகவல் வங்கி' என்ற அமைப்பை ஏற்படுத்தி பயனுள்ள தகவல்களைச் சேகரித்து வருகிறது. கொழும்பு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்துடனும் உலக அரசசார்பற்ற நிறுவனங்களுடனும் தொடர்புகளைப் பேணி வருகிறது.

(க), (பா)

## ஆட்டக் கூத்து

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்கள் பங்கு பற்றும் "மூவிராசாக்கள்" நாட்டார் ஆட்டக் கூத்து எதிர் வரும் 3 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் மேடை யேறுகின்றது.

யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் மேடையேறும் இக் கூத்தினை கலாநிதி காரை செ.சுந்தரம் பிள்ளை பயிற்றுவித்துள்ளார்.

### குடியிருப்பு

ருந்து இத் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன.

கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே அடிக்கடி மோதல்களும் இடம்பெற்றன.

### கடல்

கூட நேரமிருக்கவில்லை. அப்பகுதியில் இருந்து தாக்குதல் நடாத்தப்படும் என அவர்கள் சிறிதும் எண்ணியிருக்காமையால் பெரும் அதிர்ச்சியடைந்தனர். அவர்கள் நிலையெடுக்க முன்னரே கொல்லப்பட்டனர். புலிகள் அந்த இடங்களில் நான்கு மணிநேரம் நிலை கொண்டு இறந்த இராணுவத்தினரின் ஆயுதங்களைக் கைப்பற்றிச் சென்றனர் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

## மரண அறிவித்தல்கள்



### கந்தையா சிவலிங்கமூர்த்தி

நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது சட்டநாதர் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற கந்தையா, இராசமுத்து ஆகியோரின் சிரேஷ்ட புத்திரருமாகிய சிவலிங்கமூர்த்தி 29 - 11 - 92 அன்று காலமாகி விட்டார். இவர் நில அளவை அலுவலக முன்னைநாள் படவரைஞர் ஆவார்.

அன்னார் காலஞ் சென்ற சுந்தரம் நவரத்தினத்தின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், வத்சலா, மகிந்தன், மஞ்சுளா, அகிலன், சிறி ஜெயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தகுமாரின் மாமனாரும், தனுசா, சேமரதன், ஜனார்த்தனி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பற்குணராசாவின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சபாரட்டினம், விஜயரட்டினம், பரமேஸ்வரியினதும் தியாகேஸ்வரி (கனடா), விமலாம்பிகை (கனடா), யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரரும், கந்தசாமி (கனடா), தர்மராஜா (சுவிஸ்), பேரின்பநாதன், தனலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 29 - 11 - 92 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் அவரின் சட்டநாதர் வீதி இல்லத்தில் இருந்து செம்மணி மயானத்திற்கு எடுத்துக் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமகன்,
தாய், சகோதரர்கள்.

[3726]

### ஆறுமுகம் சுப்பிரமணியம்

ஆறுமுகம் சுப்பிரமணியம் (மணியம் கூல் பார் உரிமையாளர்) 30 - 11 - 92 நேற்று காலமானார். இவர் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், கமலாதேவி, சரஸ்வதி, பொன்னுத்துரை, யோகலிங்கம் (கனடா), சறோஜினிதேவி, யோகேஸ்வரி (ஆசிரியை பளை ம. வி.) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணபிள்ளை, தங்கராசா, மலர், விக்னேஸ்வரி (தேவி கனடா), செல்வேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், கோமதி, சிவரூபன், ரேவதி, பிரியா, சகிலா, வைதேகி, கைகேயி, சுமித்திரா, ராஜீவ் ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி பொன்னுச்சாமி தெய்வானைப்பிள்ளையின் சகோதரனும், கனகசபை, வினாசித்தம்பி, செல்லையா, தம்பித்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 01 - 12 - 1992 இன்று அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
யோகேஸ்வரி
(மகள்)

தபாற் கந்தோரடி,
பளை.

(3735)

## ஆதாரம் காட்டி பெறவும்

செம்மணிக்கும் நாவற்குழிக்கும் இடையில் சிறு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. இப்பணத்தைத் தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளமுடியும்.

### மனிதாபி

பொஸ்னியா, சோமாலியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட புதிய நெருக்கடிகள் போன்று சிறிலங்காவும் புதிய நெருக்கடிகளை எதிர் நோக்குகின்றது எனவும் இது குறித்து சர்வதேச சமூகத்திற்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது எனவும் கொழும்புக்கு வந்துள்ள சர்வதேச செஞ்சிலுவைசங்க செயலாளர் கூறியுள்ளார்.

பாதுகாப்புச் சபை கூட்டத்தில் அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை புதிய போர் தாக்குதலில் ஈடுபடும் படையினரும் தாக்குதல் முடிந்ததும் அப்பகுதியில் தரிக்காது விரைவிலேயே முகாம் திரும்புவர் எனவும் தெரியவருகிறது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**30.11.92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்;- 6877

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;-
43-2524, 27-3946, 28-1794, 24-9825

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்:- —
26-9658, 26-0375, 40-2394, 42-6157, 24-5015, 27-9489
26-1949, 27-3803, 26-2297, 41-0689, 40-1688, 42-3329
24-9938, 42-1464

செலுத்தும் என்று இந்த இணையத்தின் நிர்வாக அலுவலர் தெரிவித்தார்.

கடந்த இரு ஆண்டுகளாக இந்த இணையம் பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைப்பதிலும், இவற்றின் செயற் திட்டங்களை ஒழுங்குபடுத்துவதிலும் கவனம் செலுத்துவதன் மூலம் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கிடையிலான இணைப்புப் பாலமாக செய்யப்பட்டு வருகிறது. இத்துடன் 'தகவல் வங்கி' என்ற அமைப்பை ஏற்படுத்தி பயனுள்ள தகவல்களைச் சேகரித்து வருகிறது. கொழும்பு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்துடனும் உலக அரசசார்பற்ற நிறுவனங்களுடனும் தொடர்புகளைப் பேணி வருகிறது.

(க), (பா)

ருந்து இத் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன.

கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே அடிக்கடி மோதல்களும் இடம்பெற்றன.

### கடல்

கூட நேரமிருக்கவில்லை. அப்பகுதியில் இருந்து தாக்குதல் நடாத்தப்படும் என அவர்கள் சிறிதும் எண்ணியிருக்காமையால் பெரும் அதிர்ச்சியடைந்தனர். அவர்கள் நிலையெடுக்க முன்னரே கொல்லப்பட்டனர். புலிகள் அந்த இடங்களில் நான்கு மணிநேரம் நிலை கொண்டு இறந்த இராணுவத்தினரின் ஆயுதங்களைக் கைப்பற்றிச் சென்றனர் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், கமலாதேவி, சரஸ்வதி, பொன்னுத்துரை, யோகலிங்கம் (கனடா), சறோஜினிதேவி, யோகேஸ்வரி (ஆசிரியை பளை ம. வி.) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணபிள்ளை, தங்கராசா, மலர், விக்னேஸ்வரி (தேவி கனடா), செல்வேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், கோமதி, சிவரூபன், ரேவதி, பிரியா, சகிலா, வைதேகி, கைகேயி, சுமித்திரா, ராஜீவ் ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி பொன்னுச்சாமி தெய்வானைப்பிள்ளையின் சகோதரனும், கனகசபை, வினாசித்தம்பி, செல்லையா, தம்பித்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 01 - 12 - 1992 இன்று அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
யோகேஸ்வரி
(மகள்)

தபாற் கந்தோரடி,
பளை. (3735)

# நெஞ்சில் நிறைந்தவனின்

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

30-11-1991 அன்று கொடுவாமடுவில் நேரடிமோதலில் வீரச்சாவு அடைந்த

**முன்னாள் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தளபதி**

## லெப். கேணல் யோய்

**(கணபதிப்பிள்ளை இரகுநாதன்)**

**செங்கலடி**

| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 20-05-1969 | 30-11-1991 |



**தமிழ் ஈழ நாமத்தை**
**இதயத்தில் பதித்தவர்கள்—நாங்கள்**
**எங்கள் மூச்சுக்கள்-அடங்கிடினும்**
**நாம் எடுத்த சபதம்**
**நிச்சயம் படைப்போம்!**

-லெப். கேணல் யோய்

(சி/5513) மட்டக்களப்பு—அம்பாறை மாவட்டத் தொடர்பகம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது